## ஒட்டிசுட்டான் பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் 8 பொலீசார் கொல்லப்பட்டனர்

**5.8.84**

1984 ஆகஸ்ட் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில் யாழ்குடா நாட்டிற்கு வெளியே முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டிசுட்டான் என்ற பொலிஸ் நிலையத்தின் மீது எமது வீரர்கள் தாக்குதல்களை மேற்கொண்டனர். பயிற்றப்பட்ட எமது வீரர்களுக்குப் போதுமான ஆயுதங்கள் இல்லாத நிலையில் எதிரிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறித்தெடுக்க வேண்டிய நிலையில் நாம் திட்டமிட்டு மேற்கொண்ட கெரில்லா நடவடிக்கை இதுவாகும்.

50 பேரைக் கொண்ட இந்த பொலிஸ் நிலையத்தில் 30 பேர் கெரில்லாத் தாக்குதலுக்கு எதிரான நவீன உத்தி முறைகளில் பயிற்றப்பட்ட பொலிஸ் கமாண்டோக்கள் ஆவர். மாடிக்கட்டடத்துடன் அமைந்திருந்த இந்த பொலிஸ் நிலையத்தை எமது கெரில்லா வீரர்கள் மின்னலெனச் சுற்றி வளைத்துத் தாக்கினர். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பொலிஸ் நிலையத்தின் முன்புறமாயும் பின்புறமாயும் பாய்ந்து சென்று தங்களை நிலைப்படுத்திக் கொண்டு விட்ட எமது வீரர்களின் அதிரடித் தாக்குதலில் சிங்கள வெறியனை கனேமுல்ல என்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட எட்டு பொலிஸ் கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். எந்திரத் துப்பாக்கிகள் சகிதம் எமது வீரர்கள் நடத்திய தாக்குதலுக்கு முன்நிற்கமாட்டாமல் மற்ற சிங்களக் கூலிகள் பொலிஸ் நிலையத்தை விட்டு ஓடிவிட்டனர். ஐம்பது நிமிடங்கள் அந்த பொலிஸ் நிலையம் விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் விழுந்தது. பொலிஸ் நிலையத்திலிருந்து நான்கு இயந்திரத் துப்பாக்கிகள், மூன்று .303 ரக ரைபிள்கள், நான்கு ரிப்பீட்டர் துப்பாக்கிகள், இரண்டு .38 ரக சுழல் துப்பாக்கிகள் ஆகிய ஆயுதங்களையும் ரவைகளையும் எமது வீரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் விடுதலைப்புலிகள் அந்த பொலிஸ் நிலையத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தனர். ●